அசல்

29.1.06. பொ.மு.மு.சிரய்யா.

அசல் – 1 நகல் – 1

No. 3??
ஸ்ரீ. உ. வே. சா.
சென்னை.

p. 265-266. த.க. Vol. M

உ
திருச்சிற்றம்பலம்.

ஆத்தங்குடி
சைவசித்தாந்தசபை
29-1-06.

செந்தமிழ் மொழியின் நிலைவரம்புணர்ந்த ப்ரம்மஸ்ரீ அய்யரவர்கள் சமுகத்துக்கு நமஸ்காரம்.

பன்மொழியினும் நன்மொழியாம் தென்மொழியின்கண் ஞான்றுதலையாய பல அரும் பெரும் நூல்களைக் கசடற ஆய்ந்தும், ஆய்ந்தவாறே பக்குவம் உடையார்க்குப் போதித்தும், அந்நூல்களை வழுக்களைந்து அச்சிட்டுத் தமிழ் மாக்கட்கு ஈவதும் இன்னோரன்ன பல முயற்சிகளான் செந்தமிழ்ப் பரிபாலனம் புரிந்துவரும் தங்கள் பரோபகாரச் செயல் நோக்கி இத்தமிழுலகம் கழிபேருவகை எய்தாநிற்கின்றது.

இவ்வமயத்தில் தங்கள் தமிழ்க்கல்வியாண் திறத்தை நன்குணர்ந்த நமது கவர்ன்மெண்டார் தங்கட்கு "மகாமகோபாத்தியாயர்" என்னும் உன்னதப்பட்டம் தந்து சூட்டிய மாட்சிமையறிந்து நமது சபையாளர் அளப்பிலா ஆநந்தம் அடைந்தனர். இவ்வாறே தமிழ் மாக்கள் யாவரும் மகிழ்வெய்துவர் என்பது தேற்றமாம். இப்பட்டத்திலும் மேம்பாடுடைய தொன்று இனி கவர்ன்மெண்டாரால் கொடுக்கப் பெறுவதாய் நேரின் அதுவும் தங்கட்கே கிடைத்தல் வேண்டுமெனத் திருவருளைச் சிந்திக்கின்றனம்.

தங்கள் அன்பர்கள்,
பொ. மு. மு. சிரயா
உப அக்கிராசனாதிபதி.

உ

திருச்சிற்றம்பலம்.

No 56
ஸ்ரீ உ. வே. சா.
சென்னை.

ஆத்தங்குடி
சைவசித்தாந்தசபை
29/1/06.

செந்தமிழ் மொழியின் புலவரம் புணர்ந்த ப்ரம்ஸ்ரீ ஐயரவர்கள்
சமுகத்துக்கு நமஸ்காரம்

தென் மொழியாகு கனுள் ... ன் மொழியினும் நன்மொழியாம் ...தலையாய பல அரும்பெரும் நூல்
களைக் கசடற ஆ...ந்தும் ஆய்ந்தவாறே பக்குவமுடை
யார்க்கு போதித்தும் அந்நூல்களை வழுவறக்களைந்து
அச்சிட்டுத் தமிழ்மாக்கட் குதவியும் இன்னோரன்ன
பலவுயர் சிறந்தவனை செந்தமிழ்ப் பரிபாலனம் புரிந்துவரும்
தங்கள் பரோபகாரச் செயல் நோக்கி இத்தமிழுலகம்
கழிபேருவகை எய்தாநிற்கின்றது.

இவ்வமயத்தில் தங்கள் தமிழ்க்கல்
வியின் திறத்தை ...ணர்ந்த எமது காருண்ய
கவர்ண்மெண்டார் தங்கட்கு மகாமகோபாத்தியாயர்
என்னும் உன்னதப் ...ட்டத்தைச் சூட்டிய மகிழ்வை
அறிந்து எமது சபையினர் அளப்பரிய ஆனந்தம் அடைந்
தனர் இவ்வாறே தமிழ்மாக்களனைவரும் மகிழ்வெய்து
வர் என்பது தேற்றமாம் இப்பட்டத்தினும் மேம்பாடு
டைய தொன்று இனி கவர்ண்மெண்டாரால்
கொடுக்கப் பெறுவதாய் நேரின் அதுவும் தங்கட்கு
கிடைத்தல் வேண்டுமெனத் திருவருளைச் சிந்திக்
கின்றனம்.

தங்கள் அன்புள்ள
பொ. மு. முத்தையா
உப. அக்கிராசனாதிபதி

p. 265- 265
த. க. vol (M)

நகல்

61.

29. 1. 06.

பொ. மு. முத்தையா
சைவ சித்தாந்தக் கழகம்.
தூத்துக்குடி.

(6)

Copied
265, 66

Pages
265 - 266.
த.க. VOL 'M'